APRIL 2026

62648/344C6A/345C6A/ 347C6A/348C6A/ 351C6A/346C6A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What is meant by Cost Accounting Standards (CAS)?

   அடக்க செலவு கணக்கியல் தரநிலைகள் (CAS) என்றால் என்ன?

2. Define Responsibility Accounting.

   பொறுப்பு கணக்கியலை வரையறு.

3. How does CAS ensure comparability of cost data?

   அடக்க செலவுத் தரவின் ஒப்பீட்டை CAS எவ்வாறு உறுதி செய்கிறது?

4. What is job costing?

   பணி அடக்கவியல் என்றால் என்ன?

5. State the meaning of cost-plus contract.

   அடக்க செலவுடன் கூடிய ஒப்பந்தத்தின் அர்த்தத்தைக் குறிப்பிடுக.

6. What is work certified?

   சான்றளிக்கப்பட்ட வேலை என்றால் என்ன?

7. Mention any two features of process costing.

   படிமுறை அடக்கவியலின் ஏதேனும் இரண்டு அம்சங்களைக் குறிப்பிடுக.

8. What is abnormal loss?

   அசாதாரண இழப்பு என்றால் என்ன?

9. Define operating costing.

   இயக்க அடக்கவியல் வரையறுக்கவும்.

10. What do you mean commercial ton-km?

    வணிக டன்-கிமீ என்றால் என்ன?

11. Explain the meaning of standard hour.

நிலையான மணிநேரத்தின் அர்த்தத்தை விளக்குக.

12. Write down the formula for material mix variance and material yield variance.

பொருள் கலவை மாறுபாடு மற்றும் பொருள் மகசூல் மாறுபாட்டிற்கான சூத்திரத்தை எழுதுக.

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. List out the advantages of responsibility accounting.

பொறுப்பு கணக்கியலின் நன்மைகளை பட்டியலிடுக.

14. Explain the objectives of cost accounting standards.

அடக்க செலவு கணக்கியல் தரநிலைகளின் நோக்கங்களை விளக்குக.

15. A plant costing Rs. 1,50,000 was issued to a contract on 1.1.98. Plant costing Rs. 10,000 was transferred to another contract on 30.6.98. A plant costing Rs. 5,000 was stolen. Another plant worth Rs. 4,000 was destroyed by fire. Plant costing Rs. 3,000 was sold for Rs. 4,000. Charge depreciation at 10% per annum. Ignore depreciation for plant stolen, destroyed and sold. Show the extracts from contract account relating to plant.

ரூ. 1,50,000 விலையுள்ள ஒரு பொறி 1.1.98 அன்று ஒரு ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டது. அதில் ரூ. 10,000 விலையுள்ள ஒரு பொறி 30.6.98 அன்று மற்றொரு ஒப்பந்தத்திற்கு மாற்றப்பட்டது. ரூ. 5,000 விலையுள்ள ஒரு பொறி திருடப்பட்டது. ரூ. 4,000 மதிப்புள்ள மற்றொரு பொறி தீயில் எரிந்தது. ரூ. 3,000 விலையுள்ள ஒரு பொறி ரூ. 4,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுக்கு 10% தேய்மானம் அனுமதிக்கப்பட்டது மேலும் திருடப்பட்ட, அழிக்கப்பட்ட மற்றும் விற்கப்பட்ட பொறிக்கான தேய்மானத்தை புறக்கணிக்கவும். ஒப்பந்தக் கணக்கில் பொறிக்கான தொகை இடம் பெறுவதைக் காட்டு.

16. Product A is obtained after it passes through three distinct processes. 2,000 kgs of material at Rs. 5 per kg were issued to process I. Direct wages amounted to Rs. 900 and production overhead incurred was Rs. 500. Normal loss is estimated at 10% of input. This wastage is sold at Rs. 3 per kg. The actual output is 1,850 kgs. Prepare process I account.

பொருள் A மூன்று தனித்துவமான செயல்முறைகள் வழியாகச் சென்ற பிறகு பெறப்படுகிறது. 2,000 கிலோ பொருள் ஒரு கிலோவிற்கு ரூ. 5 என்ற விலையில் படிமுறை I க்கு வழங்கப்பட்டது. நேரடி ஊதியம் ரூ. 900 மற்றும் உற்பத்தி மேற்செலவுகள் ரூ. 500 ஆகும். சாதாரண இழப்பு உள்ளீட்டின் மீது 10% என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கழிவுகள் ஒரு கிலோவிற்கு ரூ. 3 என விற்கப்படுகிறது. உண்மையான வெளியீடு 1,850 கிலோ. படிமுறை I கணக்கைத் தயாரிக்கவும்

17. From the following information, calculate total running kilometers and total passenger kilometers.

Number of buses	–	5
Days operated in a month	–	25
Trips per day made by each bus	–	4
Distance of route	–	25 km (one side)
Capacity of bus	–	50 passengers
Average passenger travelling	–	90% of capacity

பின்வரும் தகவல்களிலிருந்து, மொத்த ஓடும் கிலோமீட்டர்கள் மற்றும் மொத்த பயணிகள் கிலோமீட்டர்களைக் கணக்கிடுக.

பேருந்துகளின் எண்ணிக்கை	–	5
ஒரு மாதத்தில் இயக்கப்படும் நாட்கள்	–	25
ஒவ்வொரு பேருந்தாலும் ஒரு நாளைக்கு மேற்கொள்ளப்படும் பயணங்கள்	–	4
வழித்தடத்தின் தூரம்	–	25 கிமீ (ஒரு பக்கம்)
பேருந்தின் திறன்	–	50 பயணிகள்
சராசரி பயணிகள் பயணம்	–	திறனில் 90%

18. What are the objectives of job costing?

பணி அடக்கவியலின் நோக்கங்கள் என்ன?

19. A factory planned to produce 1,000 units of a product, using 8,000 Labour hours costing Rs. 40 each. Actually 900 units were produced by working 8,200 Labour hours. Calculate labour efficiency variance.

ஒரு தொழிற்சாலையில் 8,000 தொழிலாளர் வேலை நேரங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொன்றும் ரூ. 40 செலவில் 1,000 யூனிட் உற்பத்தி செய்யத் திட்டமிட்டது. உண்மையில் 900 யூனிட்கள் 8,200 தொழிலாளர் வேலை நேரங்கள் வேலை செய்வதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. தொழிலாளர் திறன் மாறுபாட்டைக் கணக்கிடுக.

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Explain the methods used for Divisional Performance Measurement in an organization.

ஒரு நிறுவனத்தில் பிரிவு செயல்திறன் அளவீட்டிற்குப் பயன்படுத்தப்படும் முறைகளை விளக்குக.

21. From the following information, you are required to prepare contract account :

Materials directly purchased	Rs. 90,000
Material issued from stores	Rs. 25,000
Plant purchased	Rs. 80,000
Wages	Rs. 1,22,000
Direct expenses	Rs. 12,000
Proportionate establishment charges	Rs. 27,000

The contract was for Rs. 7,50,000 and upto 30th June, 1994 Rs. 2,90,000 had been received in cash which represented 80% of work certified by the architect. The materials on site unconsumed were valued at Rs. 7,500. The depreciation on plant worked out to Rs. 8,000.

பின்வரும் தகவல்களிலிருந்து, நீவீர் ஒரு ஒப்பந்தக் கணக்கைத் தயாரிக்க வேண்டும்.

நேரடியாக வாங்கிய பொருட்கள்	ரூ. 90,000
கடைகளில் இருந்து வழங்கப்பட்ட பொருட்கள்	ரூ. 25,000
பொறி கொள்முதல் செய்தது	ரூ. 80,000
கூலி	ரூ. 1,22,000
நேரடி செலவுகள்	ரூ. 12,000
விகிதாசார நிறுவனக் கட்டணங்கள்	ரூ. 27,000

ஒப்பந்தம் ரூ. 7,50,000 ஆக இருந்தது மற்றும் ஜூன் 30, 1994 வரை ரூ. 2,90,000 ரொக்கமாகப் பெறப்பட்டது, இது கட்டிடக் கலைஞரால் சான்றளிக்கப்பட்ட வேலையின் 80% ஆகும். தளத்தில் உள்ள நுகரப்படாத பொருட்கள் ரூ. 7,500 என மதிப்பிடப்பட்டன. பொறியின் மீதான தேய்மானம் ரூ. 8,000 ஆகக் கணக்கிடப்பட்டது.

22. From the following information, prepare process cost accounts and normal loss, abnormal loss or gain accounts.

	Process A	Process B
	Rs.	Rs.
Material	30,000	3,000
Labour	10,000	12,000
Overheads	7,000	8,600
Input (units)	20,000	17,500
Normal loss	10%	4%
Sale of waste per unit (Rs.)	1	2
Final output from Process B (units)	–	17,000

பின்வரும் தகவல்களிலிருந்து, படிமுறை செலவுக் கணக்குகள் மற்றும் சாதாரண இழப்பு, அசாதாரண இழப்பு அல்லது ஆதாயக் கணக்குகளைத் தயாரிக்கவும்.

	படிமுறை A	படிமுறை B
	ரூ.	ரூ.
பொருள்	30,000	3,000
பணியாளர் உழைப்பு	10,000	12,000
மேற்ச் செலவுகள்	7,000	8,600
உள்ளீடு (அலகுகள்)	20,000	17,500
சாதாரண இழப்பு	10%	4%
கழிவு விற்பனை அலகு ஒன்றுக்கு	1	2
படிமுறை B (அலகுகள்) யிலிருந்து இறுதி வெளியீடு	–	17,000

23. From the following data calculate the cost per mile of a vehicle :

	Rs.
Value of vehicle	15,000
Road license for the year	500
Insurance charges per year	100
Garage rent per year	600
Driver's wage per month	200
Cost of petrol per litre	0.80
Miles per litre	8.00
Proportionate charge for tyre and maintenance per mile	0.20
Estimated life	1,50,000 miles
Estimated annual mileage	6,000 miles

Ignore interest on capital

பின்வரும் தரவுகளிலிருந்து ஒரு வாகனத்தின் ஒரு மைலுக்கு செலவைக் கணக்கிடுக.

	ரூ.
வாகனத்தின் மதிப்பு	15,000
சாலை உரிமம் ஆண்டுக்கு	500
காப்பீட்டு கட்டணம் ஆண்டுக்கு	100
கேரேஜ் வாடகை ஆண்டுக்கு	600
ஓட்டுநரின் ஊதியம் மாதத்திற்கு	200
பெட்ரோல் செலவு லிட்டருக்கு	0.80
மைல்கள் லிட்டருக்கு	8.00
டயருக்கும் பராமரிப்புக்கும் விகிதாசார கட்டணம்	0.20
மதிப்பிடப்பட்ட ஆயுள்	1,50,000 மைல்கள்
மதிப்பிடப்பட்ட ஆண்டு மைலேஜ்	6,000 மைல்கள்

மூலதனத்தின் மீதான வட்டியைப் புறக்கணிக்கவும்

24. From the following particulars calculate

(a) Material Price variance

(b) Material usage variance

(c) Material cost variance

Materials	Standard		Actual	
	Units	Price (Rs.)	Units	Price (Rs.)
A	1,010	1.00	1,080	1.20
B	410	1.50	380	1.80
C	350	2.00	380	1.90

பின்வரும் விவரங்களிலிருந்து கணக்கிடவும்.

(அ) பொருள் விலை மாறுபாடு

(ஆ) பொருள் பயன்பாட்டு மாறுபாடு

(இ) பொருள் செலவு மாறுபாடு

பொருட்கள்	தரநிலை		உண்மையானது	
	அலகுகள்	விலை (ரூ.)	அலகுகள்	விலை (ரூ.)
A	1,010	1.00	1,080	1.20
B	410	1.50	380	1.80
C	350	2.00	380	1.90

———————